

கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் துணைவேந்தர், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் பேராசிரியர் ராஜேந்திரன் அவர்கள் நேரில் வந்து அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து ஆறுதல் கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் 26.08.2025 அன்று துவக்கி வைத்து இராவணன் அகாடமியின் சிலம்பாட்ட கலை நிகழ்ச்சியினை பார்வையிட்டனர். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி. திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் இளைஞர் நலன் மற்றும் வியாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் மாவட்ட அளவில் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ஜெ.டேவிட் டேனியல் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான அன்பில் பொய்யாமொழி அவர்களின் 26–ஆம் ஆண்டு நினைவு தினம், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், நடைபெற்றது. அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், சபியுல்லா, பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டில் 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு

# ஒன்றிய அரசின் ‘தேசிய தர நிர்ணய விருது’!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக.29-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் நேற்று முன்தினம் (27.8.2025) சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் NABH - தேசிய தர நிர்ணய வாரிய சான்றிதழ் பெற்றுள்ள ஓமந்தூரார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய 5 அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர். பிறகு இந்தியன் வங்கி CSR நிதி பங்களிப்புடன் ரூ.15 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனம் ஓமந்தூரார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒப்படைக்கப்பட்டது.

இதுகுறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-



### NABH - தேசிய தர நிர்ணய வாரிய சான்றிதழ்

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வரலாற்றில் இன்றைக்கு ஒரு மகத்துவமான நாள். இந்தியாவில் 700க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ளது. தமிழ்நாட்டைப் பொருத்தவரை 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் உள்ளது. மருத்துவமனை மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒன்றிய அரசின் சார்பில் பல்வேறு விருதுகள் வழங்கப்படுகின்றது. ஒன்றிய அரசின் சார்பில் தற்போது NABH என்று சொல்லக்கூடிய தேசிய தர நிர்ணய வாரிய சான்றிதழ் தமிழ்நாட்டில் ஐந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழை பொறுத்தவரை ஒன்றிய அரசின் சார்பில் எத்தகைய முறைகளில் கணக்கிடப்படுகிறது என்றால் தனியார் மருத்துவமனைகளில் சுகாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. தனியார் மருத்துவமனைகளின் தரத்தை சர்வதேச அளவில் பிற உலகளாவிய சுகாதார தரங்களுடன் இணையாக அங்கீகரிக்கப்பட்ட ISQua (International Society for Quality Assurance in Health Care) என்கின்ற வகையில் சுகாதாரத்தில் தர உறுதிக்கான சர்வதேச தரத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகளின் அங்கீகார நிலைகள் மாறி வரும் சுகாதார சூழ்நிலையில் மருத்துவமனைகளில் வழங்குகின்ற சுகாதாரம் மருத்துவ பயனாளிகளின் பாதுகாப்பிற்கு மிக முக்கியமாக உள்ளது. அதைக் கருத்தில் கொண்டு கீழ்கண்ட அளவீடுகளில் 10 தர நிலைகளில் இச்சான்றிதழ் தனியார் மருத்துவமனைகளுக்கு என்று தொடங்கப்பட்டு முதன்முறையாக தற்போது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ஐந்து இடங்களுக்கு தரப்பட்டுள்ளது.

குறிப்பாக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவள்ளுவர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமாரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்று ஐந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இந்த NABH என்கின்ற இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாகவே இச்சான்றிதழ் கிடைக்க பெறுவதற்கு தரவுகள் காரணங்கள் மருத்துவ பயனாளியை அணுகுதல் மதிப்பீடு மற்றும் தொடர் சிகிச்சை (*Access, Assessment and continuity of care*)

மருத்துவ பயனாளிகளை நன்கு கவனித்துக் கொள்ளுதல் (*care of patients*)

மருந்து மேலாண்மை (*management of medication*

மருத்துவ பயனாளியின் சிகிச்சை மேம்படுத்துதல், தரத்தை அறிதல் (*patients rights and education*)

மருத்துவமனையில் தொற்றினை கட்டுப்படுத்துதல் (*Hospital infection control*)

மருத்துவ பயனாளியின் மருத்துவ சேவையை உயர்த்துதல் (*patient safety and quality improvement*)

மேலாண்மை வசதிகள் மற்றும் பாதுகாப்பு (*facilities management and safety*)

தகவல் தொடர்பு மேலாண்மை (*information management system*

மேலாண்மையின் பொறுப்புகள் (*responsibilities of management*

மனிதவள மேலாண்மை *Human Resource Management*

ஆகிய பத்து அளவீடுகளின் மூலம் இத்தகைய விருதுகள் நிர்ணயிக்கப்படு கின்றன என்கின்ற வகையில் இந்த பத்து அளவீடுகளில் வகையில் மிக சிறப்பான வகையில் முன்னெடுப்பை எடுத்து அந்தந்த கல்லூரியின் முதல்வர்கள் குறிப்பாக மருத்துவக் கல்வி இயக்ககம் இன்றைக்கு மிகச் சிறப்பாக பணியாற்றுதல் நிகழ்வாக ஒன்றிய அரசின் NABH - National Accrediation Board for Hospitals & Health Care Providers இந்த விருதுக்குரிய சான்றிதழ்கள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்கு பிறகு இந்த மருத்துவமனைகளை மேம்படுத்துவது, மருத்துவ கட்டமைப்புகளை உயர்த்துவது போன்ற பல்வேறு நிலைகளில் இந்த மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்திக் கொண்டிருக்கும் காரணத்தினால் தான் இது போல விருதுகள் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்று வருகிறது. ஒன்றிய அரசின் விருதுகள் கடந்த 4.5 ஆண்டுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ஏறக்குறைய 1600 விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த 1600 விருதுகளில் இன்று கிடைக்கப் பெற்றுள்ள 5 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான விருதுகள் பெரிய மகுடம் போன்றவை. இது போன்ற விருதுகளை பெறுவதற்கு உழைத்த மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், மருத்துவ பேராசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களுக்கு எனது வாழ்த்துகள்.

அதேபோல் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பொறுத்தவரை, 2015 ஆம் ஆண்டு 100 இளங்கலை மருத்துவ பட்ட படிப்புகளுடன் தொடங்கப்பட்டது. இன்று 31 பட்ட மேற்படிப்பு மாணவர்களும், குறிப்பாக பொது அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நலம், மயக்கவியல், அவசர சிகிச்சை, முட நீக்கியல் துறை, குழந்தைகள் நல மருத்துவம் போன்ற 31 பட்ட மேற்படிப்பு மாணவர்கள் பயின்று வருகிறார்கள். தினந்தோறும் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2000 பேர் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று செல்கிறார்கள். 565 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் உள்நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு மிகச் சிறப்பான வகையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இரத்த சுத்திகரிப்பு நிலையம், பாதம் பாதுகாப்போம் திட்டம், மக்களை தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 போன்ற பல்வேறு திட்டங்கள் இந்த மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இன்று விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இந்த மருத்துவமனைக்கு CSR பங்களிப்புடன் இந்தியன் வங்கி சார்பில் ரூ.15 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதற்காக இந்தியன் வங்கிக்கு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அரிகரன், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. மோகன் காந்தி, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்த், சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குனர் மரு. மணி, திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. சுரேஷ் பாபு, மற்றும் சென்னை வடக்கு மண்டலம் இந்தியன் வங்கி மேலாளர் திரு.மகேஷ்குமார், கிளை மேலாளர் திருமதி. மாலா, மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. – படப்பை ஆ.மனோகரன் முன்னிலை! மாங்காடு நகரம்

# பட்டூர் எஸ்.ஜபருல்லா - யாஸ்மின் ஜபருல்லா இல்ல மணவிழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, ஆக. 29 -

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் - நகர்மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா - நகர்மன்ற உறுப்பினர் யாஸ்மின் ஜபருல்லா ஆகியோரின் புதல்வி ஜெ.சனோபர் பசீலாவுக்கும், சென்னை - புரசைவாக்கம் எஸ்.ஏ.ஏ. முகைதீனின் புதல்வர் எம்.அப்துல் மாலிக் சல்மானுக்கும் மணவிழா 7.9.2025 - ஞாயிறு காலை 10.30 மணியளவில் திருவேற்காடு, பெருமாளகரம் சாலை, ஜி.பி.எஸ். பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு.நாசர், பி.கே. சேகர்பாபு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., மீ.அ. வைதியலிங்கம், அன்பகம் கலை, க.செல்வ எம்.பி., இ. கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு.மணிமாறன், ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.,

கே.நவாஸ்கனி எம்.பி., வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., மேயர் க.வசந்தகுமாரி, மேயர் பிரியா ராஜன், நா.எழிலன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., காரம்பாக்ககம் க.கணபதி எம்.எல்.ஏ., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பூச்சி எஸ்.முருகன்,

துறைமுகம் காஜா, பிரபு கஜேந்திரன், இறையன்பன் குத்தூஸ், எ.எம்.விக்கிரம ராஜா, கோ.காமராஜ், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், எம். யாக்கூப், மா.வை. மகேந்திரன், சுமதி முருகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழகச் செயல் வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்ற னர்.

ஜெ.முகமது வசுருதீன் சுகைல் (எ) ஜூகி நன்றி கூறுகிறார்.

## தலைமை: ஏகா.கார்த்திகேயன்! வி.இராமநாதன் – இரா.முருகேசன் பங்கேற்பு!

# திருவொற்றியூர் - தாங்கல் தியாகராயபுரம் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஆக. 29-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 14அ வட்டத்தில் அமைந்துள்ள தாங்கல் தியாகராயபுரம் பகுதியில் வசிக்கும் பொது மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டன.

வட்டக் கழகச் செயலாளர், கழக சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் ஏகா. கார்த்திகேயன், தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் 350க்கும் மேற்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கி விழா பேருரை ஆற்றினார்.

சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் பேசும் போது கடந்த கால கழக ஆட்சியிலும் தற்போது நடைபெறும் திராவிட முதல்வர் தளபதியார்அவர்களது நல்லாட்சியிலும் நடைபெற்று வரும் மக்கள் நல திட்டங்களையும், புதிதாக திருவொற்றியூரில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டங்களை விரிவாக விளக்கி பேசினார்.

மேற்படி நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன், தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் குட்டி என்கிற எத்திராஜ், அப்துல் சலீம், சு.பரமானந்தம், இமயவரம்பன், மைக்கேல் பந்தய சேகர், டைலர் பாபு, நேவி ராஜன், தாமஸ், நயினார் காஜா, மீரான் பாய், அம்சா பாய், உலக முதல்வன், ராஜா ,லாரன்ஸ், ஆரோக்கியராஜ், ரோஹித் ,கருணாநிதி, ஜோசப், விக்டர், டைலர் மணி, இயேசு மகேந்திரன் மற்றும் திரளான கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ராஜன் தோட்டம் சாய் விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் மாவட்ட அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை நகர கழக செயலாளர்குண்டாமணி (எ) என். செல்வராஜ் , ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.ராஜா, ஞான. இமய நாதன், எம்.அப்துல் மாலிக், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ. வின்சென்ட், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி எம்.கே.மருது விளையாட்டு மேம்பாட்டு அணி அறிவு (எ) க.அறிவுசெல்வன், வர்த்தக அணி வெடி எஸ்.பாலமுருகன் மற்றும் பலர் உள்ளனர்.